**மீரிகம பிரதேச சபை - 2022**
---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மீரிகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, மீரிகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சல் கூற்றினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, இந்த அறிக்கையில் 1.6 பந்தியில் 1.6.1 அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 3 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், பணம் மீளளிப்புச் செய்யப்படாத கூட்டுப் பெறுமதி ரூபா 8,355,598 தொகை மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் மற்றும் மூலதன மானியங்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்தப் பெறுமதி கடன் கொடுத்தோர் மற்றும் ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 3,719,801 தொகை பெறுமதியான 02 கணக்கு மீதிகளின் கீழ் நிர்மாண வேலை கடன் பட்டோர் பதிவேடு மற்றும் வைப்புப் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | 2023 ஆண்டில் சரி செய்யப்படும் என. | பதிவேடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1946 இன் 30 ஆம் இலக்க வரிகள் மற்றும் பெறுமதி மதிப்பீட்டு கட்டளை சட்டத்தின் பிரிவு இலக்கம் 20 | 2009 ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டினை அடிப்படையாக கொண்டு நடைமுறை ஆண்டிற்கான வீதவரி அறவீடு செய்யப்பட்டிருந்தது. | வீதவரி பெறுமதி மதிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என. | 05 வருடங்களுக்கு ஒருமுறை வீதவரி பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு புதிய வீதவரி ரேட்கள் மீது வரி அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 371 | சபையின் 1991 ஆண்டு முதல் 2012 ஆண்டு வரையான காலத்தில் இருந்து 98 தீர்க்கப்படாத முற்பண மீதிகள் ரூபா 6,184,773 தொகை தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுதந்திரமான நபர் ஒருவருடனான குழுவொன்றுக்காக அங்கீகாரம் கோறப்பட்டுள்ளது என. அதன்படி மீதிகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | முற்பணங்கள் தீர்க்கப்பட வேண்டும். |
| (இ) | நிதிப் பிரமாணம் 571 | 2 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 1,149,362 தொகைக்கான வைப்புக்கள் ஆதனவழிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வைப்புக்கள் ஆதனவழிப்புச் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 1980/46 இலக்க 1980 திசெம்பர் 1 திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பந்தி 7 | துணை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த 4 கடையறைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவை மிகைத்த வருமானம் ரூபா 62,390,419 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவை மிகைத்த வருமானம் ரூபா 7,961,437 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2021 மதிப்பீட்டு வருமானம் | 2021 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2021 சேகரிக்கப்பட்ட வருமானம | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 14,817,700 | 12,178,416 | 13,073,421 | 7,327,151 | 14,258,400 | 15,124,445 | 14,108,572 | 8,445,457 |
| (ii) | வாடகை | 38,066,600 | 29,586,530 | 33,614,763 | 5,061,651 | 37,069,800 | 28,297,352 | 23,936,718 | 9,116,434 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,150,000 | 1,640,045 | 1,640,045 | 59,725 | 1,900,000 | 1,277,761 | 1,277,561 | 59,725 |
| (iv) | ஏனைய வரு மானங்கள் | 205,557,000 | 251,372,651 | 240,124,295 | 10,308,076 | 217,663,500 | 160,942,089 | 140,810,792 | 20,128,392 |
| | | 260,591,300 | 294,777,642 | 288,452,524 | 22,756,603 | 270,891,700 | 205,641,647 | 180,133,643 | 37,750,008 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 7,316,390 இற்கான நிலுவை வீதவரி மீதியில் நிலுவையாக காணப்பட்ட காலம் 10 வருடங்களை விட மிகைத்துள்ள மீதி ரூபா 3,362,244 தொகையும், 5 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட மீதி ரூபா 1,163,261 தொகையும், 3 வருடங்களுக்கும் 5 வருடங்களுக்கும் இடைப்பட்ட மீதி ரூபா 863,888 தொகையும் காணப்பட்டது. | மீதித் தொகையிலிருந்து ரூபா 442,882 தொகை அறவீடு செய்வதற்கு முடியுமானது என. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நிலுவை வீதவரி அறவீடு செய்யப் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு காலப் பகுப்பாய்வின் படி பெற வேண்டிய வியாபார நிலைய வாடகை மீதி ரூபா 3,908,150 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றின் ரூபா 324,800 தொகை 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்டிருந்ததுடன், ரூபா 67,600 தொகை 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்டதாக காணப்பட்டது. | கடை உரிமையாளர்களை அறிவுருத்தி அறவீடு செய்வதற்கும், சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் அறிவுரை வழங்கப்பட்டது. | உடன்படிக்கையின் படி வாடகை அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறு ரூபா 44,330 தொகையான கைத்தொழில் வரியில் எதுவித தொகையும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை பதிவழிப்பதற்கான அங்கீகாரத்துக்காக அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை கைத்தொழில் வரி அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 விலை மதிப்புத் திணைக்களத்தினால் வழங்கியிருந்த பெறுமதி மதிப்பீட்டின் படி | கடை உரிமையாளரை அழைத்து கலந்துரையாடி | சாவிக் காசு மீதியை அறவீடு செய்யப்பட |

| | | |
|---|---|---|
| 28 கடையறைகளின் மற்றும் டென்டர்களின் மூலம் வழங்கியிருந்த 05 கடையறைகளின் இருந்து ரூபா 46,366,800 தொகைக்கான சாவிக் காசு அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அறவீடு செய்யப்படும் என. | வேண்டும். |

### 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியளவில் பொதுமக்கள் முறைப்பாடுகள், பாதைகள் தொடர்பாக 58 உம், அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் 37 உம், ஆபத்தான மரங்கள் தொடர்பாக 125 உம், ஆக 357 கிடைத்திருந்ததுடன், அவற்றில் 185 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | மீதியான முறைப்பாடுகளை விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்தின் மற்றும் துணை விதிகளின் அதிகாரங்களின் படி பொதுமக்கள் முறைப்பாடுகள் தீர்க்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 2 ஏக்கர் 3 ரூட்களுக்கான 16 காணிகள் மற்றும் அளவினை சரியாக இனங் காண முடியாத 06 காணிகளின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2023 ஆண்டு இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும் என. | பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 341 கடையறைகளில் 206 தொடர்பாக உடன்படிக்கை மேற்கொண்டிருக்காததுடன், அனேகமான வாடகை உடன்படிக்கைகள் 20 வருடங்களுக்கு முன்னர் கையொப்பமிடப்பட்டவைகள் ஆகும். | புதிய பெறுமதி மதிப்பீடுகள் கிடைத்த பின்னர் கடைகளுக்கான வாடகை உடன்படிக்கைகளுக்கு கையொப்பமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வாடகை உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | காணி உறுதி இலக்கம் 11565 கொண்ட 03 ரூட்கள் 12 பர்சஸ்கள் அளவான அளவான ரூபா 13,200,000 தொகை பெறுமதியான காணியை சபைக்கு உரித்தாக்கியிருக்கவில்லை. | 2023 ஆண்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | காணியை உரித்தாக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன்பட்டோர் மீதி ரூபா 24,477,204 தொகையாக இருந்தது. | நிர்மாண வேலை கடன் பட்டோர் மீதியில் ஒரு தொகை பதிவழிப்பதற்கும் முன்கொண்டு செல்லப்பட வேண்டிய தொகையை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடன் பட்டோர் தீர்க்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிர்மாணவேலை கடன் கொடுத்தோர் மீதி ரூபா 35,179,224 தொகையாகும். | தொகையொன்று பதிவழிப்பதற்கும், முன்கொண்டு செல்லப்படும் தொகையை செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடன் கொடுத்தோர் மீதி தீர்க்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் ஊழியர் கடன் முற்பணக் கணக்கின் படி, வருடாந்த பாதீட்டின் மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டிருந்த பெறுவனவுகளின் குறைந்த எல்லை ரூபா 12,000,000 தொகையாக இருந்த போதிலும், ஆண்டின் போது அறவீடு செய்யப்பட்டிருந்த பெறுமதி ரூபா 8,838,866 தொகையாக இருந்தது. | தனியாக முற்பணக் கணக்கு பேணிச் செல்லப்படுகின்றது என. | பெறுவனவுகளின் குறைந்த எல்லையை நெருங்க வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இறந்த மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர்கள் இருவரிடம் ரூபா 225,761 இற்கான ஊழியர் கடன் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | ஓய்வூதியம் செலுத்துதல் நிறுத்தப்பட்டுள்ளது. சபையினால் அறவிடப்பட வேண்டிய தொகையை செலுத்தும் படி மீரிகம பிரதேச செயலாளருக்கு, ஓய்வூதிய பணிப்பாளருக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | ஊழியர் கடன் அறவீடு செய்யப்பட வேண்டும். |